AIDS InfoNet www.aidsinfonet.org Fact Sheet Number 208

# உங்கள் ஆயுள் காப்பீடு விற்பனை

# SELLING YOUR LIFE INSURANCE

**குறிப்பு**: ஆயுள் காப்பீட்டு பாலிசிகளின் விற்பனை (யு.எஸ்) அமெரிக்காவில் சாத்தியமான ஒன்றாகும், மற்ற நாடுகளை பற்றி தெரியாது.

**ஆயுள் காப்பீட்டு பாலிசிகளை மக்கள் ஏன் விற்கிறார்கள்?**

உயிருக்கு சவால் விடும் நோயுள்ள அதிகமான மக்கள் தங்களின் பல்வேறு செலவுகளின் பண தேவைக்காக ஆயுள் காப்பீட்டு பாலிசிகளை விற்பனை செய்ய முடிவெடுக்கிறார்கள். ஆயுள் காப்பீடு பொதுவாக நம்மை சார்ந்தவர்களுக்கு பணம் தருவதற்கான வழியாகும். இந்த வகையில், நாம் நமது தேவைக்கான பணத்தை மற்ற பிற வழிவகைகளில் இருந்து பெற்று ஆயுள் காப்பீட்டு பாலிசிகளை நம்மை சார்ந்தவர்களுக்கு வைக்கமுடியும்.

**ஆயுள்காப்பீட்டு பாலிசிகளை யார் வாங்குவார்?**

பண முதலீடு செய்பவர்கள் அதிக நாள் உயிரோடு இருக்கமாட்டர்கள் என தெரிந்த மக்களிடமிருந்து ஆயுள் காப்பீட்டு பாலிசிகளை வாங்குவார்கள். பண முதலீடு செய்பவர்கள் தள்ளுபடி விலையில் பாலிசிகளை வாங்குவார்கள். பண முதலீடு செய்பவர்கள் பாலிசி விற்றவர் இறந்தவுடன் பாலிசியின் முழு பலன்களை காப்பீட்டு நிறுவனத்திடமிருந்து பெறுவார்கள்.

**நாம் ஆயுள் காப்பீட்டு பாலிசிகளை எப்படி விற்க முடியும்?**

ஆயுள் காப்பீட்டு பாலிசிகளை விற்பது வியாடிகேசன் எனப்படும். நாம் ஆயுள் காப்பீட்டு பாலிசிகளை விற்க விரும்பினால், அடஹி நேரடியாக வியடிகல் முதலீடு நிறுவனத்திடமோ அல்லது புரோக்கரிடமோ விற்கலாம்.

- வியடிகல் முதலீடு நிறுவனங்களுக்கு ஆயுள் காப்பீட்டு பாலிசிகளை விற்பவர்கள் மற்றும் வாங்குபவர் பற்றி தெரியும். இந்த கம்பெனிகள் பாலிசிகளை விற்கும் மக்களுக்கு பணம் தருகிறது, விற்றவர் இறந்தால் பாலிசியின் பலனை பெற்று முதலீடு செய்பவர்களுக்கு கொடுக்கிறார்கள்.
- புரோக்கரானவர் பாலிசிகளை விற்க்க விருப்பம் உள்ள மக்களிடமிருந்து விண்ண்ப்பங்களை பெற்று அந்த விவரங்களை பல்வேறு வியடிகல் நிறுவனங்களுக்கு தருகிறார்கள். புரோக்கர்கள் ஒருவருடைய காப்பீட்டு பாலிசிகளுக்கான அதிகபட்ச விலை பெற்றுத்தருவார். புரோக்கரானவர் அதிகமான கம்பெனிகளுடன் தொடர்பில் இருப்பது நல்லதாகும். பாலிசியானது குறைந்தது 3 நிறுவனங்களால் பார்க்கப்பட வேண்டும்.

**பாலிசியை வாங்குவதற்கான அடிப்படை என்ன?**

பாலிசிக்கு கொடுக்கவேண்டிய தொகையை மற்றும் மேற்கொள்ள வேண்டிய நிபந்தனைகளை முடிவு செய்ய ஒவ்வொறு நிறுவனமும் தங்கள் நிறுவனத்திற்கான வழிமுறையை உண்டாக்குகின்றன. பொதுவாக, பாலிசிகளை விற்க நாம் பல்வேறு நிபந்தனைகளை பூர்த்தி செய்யவேண்டும்.

- குறைந்தது 2 ஆண்டுகளுக்கு பாலிசியை வைத்திருக்கவேண்டும். ஹெச்ஐவி இருப்பதாக தகவல் ஏதும் அதில் இருக்கக்கூடாது.
- பாலிசியின் பாலிசிதாரர் மற்றும் பயனடைபவர்களின் ஒப்புதல் பெறவேண்டும். குரூப் பாலிசியில் உங்களது பங்கினை விற்க்க உங்கள் நிறுவனத்தின் ஒப்புதல் வேண்டும்.
- டெர்மினல் உடல்நலக் கோளாறு இருந்தால், பொதுவாக மருத்துவரால் குரைந்த காலமே வாழ்வீர்கள் என தெரிவிக்க வேண்டும். அதிகமான மருத்துவ பிரச்சனைகளை உங்கள் பாலிசியில் தெரிவிக்கப்பட்டால், உங்கள் பாலிசிஅதிகமான ஏலத் தொகையை பெறும். உங்களுக்கு அதிகமான சிடி4 எண்ணிக்கை இருந்தால், வியாடிகேசன் நல்ல தேர்வு கிடையாது.

A Project of the New Mexico AIDS Education and Training Center. Partially funded by the National Library of Medicine
Fact Sheets can be downloaded from the Internet at http://www.aidsinfonet.org

வியடிகல் நிறுவனங்கள் பல்வேறு வகை பாலிசிகளை வாங்க பல்வேறு நிபந்தனைகளை மேற்கொள்ளும் அல்லது காப்பீட்டு நிறுவனங்களின் நிபந்தனைகளை எடுத்துக் கொள்ளும். நிறுவனங்கள் உங்கள் பாலிசியில் உள்ள மருத்துவ குறிப்புகளின் படியே பாலிசிக்கு வழங்க வேண்டிய தொகையை முடிவு செய்வார்கள். பொதுவாக இந்த செயல்முறை 6 வாரம் முதல் 3 மாதங்களில் முடியும்.

**எவ்வளவு தொகை கிடைக்கும்?**

பாலிசிக்கான தொகை எவ்வளவு கிடைக்கும் என்பது அதிகமாக எத்தனை வருடம் உயிரோடு இருப்போம் என்பதை பொறுத்து மாறுபடும். குறுகியகாலத்தில் ஆயுள் காப்பீட்டின் சலுகைகள் பெற விரும்பும் முதலீட்டாளர்கள் அதிக தொகை செலுத்த தயாராகின்றனர். நீங்கள் பாலிசிக்காக பெறும் குறிப்பிட்ட தொகைக்கு வரி விலக்கு இருக்கலாம். உங்கள் வரி ஆலோசகரை கேளுங்கள்.

சக்திவாய்ந்த ஆண்டிரெற்றொவிரல் மருத்துவ முறை வருவதற்கு முன்னால், நிறுவ்னங்கள் பாலிசியின் நிர்ணய மதிப்பில் 85 சதவீதம் வரை கொடுத்தார்கள். பல்வேறு வகையான குணப்படுத்தக்கூடிய சிகிச்சைகளின் அறிமுகத்தால் பாலிசிகளுக்கு வழங்கப்பட்ட தொகை அதிகமாக வீழ்ச்சி அடைந்துள்ளது.

திி நேசனல் அசோசியேசன் ஆப் இன்ஸூரன்ஸ் கமிசனர்ஸ் ( என் ஏஐசி) வியடிகல் தொகையை உயிர் வாழும் காலத்தை ஆதாரமாகக் கொண்டு, வாழும் காலம் 6 மாதங்களுக்கு கிழ் உள்ளவர்களுக்கு 80 சதவீதம் வரையான தொகை வழங்க வழிமுறைகளை செய்தார்கள்.

இருந்த போதிலும், தற்போதய ஆண்டிரெற்றொவிரல் மருத்துவ முறையின் வெற்றியின் காரணாமாக காப்பீட்டு நிறுவனங்கள் ஹெச்ஐவி உள்ளவர்களின் பாலிசிகளை வாங்க தயாராக இல்லை.

**எந்த வழிமுறையை தேர்வு செய்யலாம்?**

வியடிகல் ஓரளவு புதிய நிறுவனம் ஆகும். எய்ட்சால் பாதிக்கப்பட்ட மக்கள் தங்கள் மருத்துவ செலவால் கடனாளியாக ஆவதால் தொடங்கப் பட்டது. இருந்தபோதிலும், நீங்கள், ஆயுள் காப்பீட்டினை பனத்திற்காக விற்க முடியாது. உங்கள் பாலிசி முகவரிடம் கிழ்கண்டவற்றை விசாரித்து அறியவும்:

- காப்பீட்டு பாலிசியை வைத்து சில சமயம் மிககுறைந்த வட்டி விகித்தில் பணம்பெற முடியுமா.
- பாலிசிக்கு சரண்டர் மதிப்பிருந்தால் பணமாக மாற்ற முடியுமா.
- வாழும் பலன்கள் அல்லது நாம் வாழும் காலத்திற்கு விரைவான பலன்களை தரவழி உள்ளதா.

**நன்மைகள்**

நீங்கள் உங்கள் ஆயுள் காப்பீட்டை விற்க விரும்புவீர்கள் ஏனென்றால்

- ஒரு பெரிய பணத்தொகயை பாலிசிக்கு பதிலாக பணமாக பெறமுடியும்.
- நீங்கள் என்ன விரும்புகிறீர்களோ அந்த விதத்தில் பணத்தை செலவு செய்யலாம்.
- நீங்கள் இதற்கு மேல் காப்பீட்டு தவணை கட்ட தேவை இல்லை.
- காப்பீட்டின் தற்போதய பண மதிப்பு தொகையை விட அதிகமான தொகையை பெறமுடியும்.
- காப்பீட்டை வைத்து கடன் பெற்றால் பணம் திரும்ப செலுத்துவது போல பணத்தை திரும்ப செலுத்த வேண்டாம்.
- சில பாலிசிகளில் கிடைக்கும் பணத்திற்கு வரி விலக்கும் பெறலாம்.

**தீமைகள்**

ஆயுள் காப்பீட்டு பாலிசிகளை விற்பதால் சில தீய பலன்கள் உள்ளன அவையாவை,

- நீங்கள் சில பொது மக்களுக்கான சலுகைகளை பெறுவதற்கான வாய்ப்பை இழக்க நேரிடலாம். இது பொதுவாக உங்கள் வருமானம் மற்றும் சொத்துகளை பொறுத்து கிடைக்கும் சலுகைகள் அதவது, மருத்துவ, உணவு பொருள்கள், சமூக நலன் மற்றும் சமூக பாதுகாப்பு நலன்கள் ஆகும்.
- நீங்கள் இறக்கும் போது கிடைக்கக்கூடிய ஆயுள் காப்பீட்டின் பலன்கள் கிடைப்பதில்லை. நீங்கள் விருப்பப்பட்ட மக்களுக்கோ அல்லது சமூக அமைப்பிற்கோ பணத்தை தர முடியாது நீங்கள் உங்களது காப்பீட்டை விற்ப்பதனால்.
- பிற மக்கள் நீங்கள் காப்பீட்டை விற்பதால் உங்களுக்கு உள்ள நோய்களைப்பற்றி அறிய நேரிடலாம்.

**காப்பீட்டை வாங்க சரியான நிறுவனத்தை தேர்ந்த்து எடுக்ப்பது எப்படி?**

மாநில காப்பீட்டுத்துறையில் வியடிகல் நிறுவனங்களின் உரிமம் பற்றி விசாரிக்கவ்வும். பல நிறுவனங்களில் இருந்து காப்பீட்டிற்கான விவரங்களை பெறவும். தி லாஇப் இன்ஸூரன்ஸ் செட்டில்மெண்ட் அசோசியேசன், ஒர்லண்டோ, எப்எல்(407)894-3797 மற்றும் இணயதள முகவரியில் www.lisassociation.org

A Project of the New Mexico AIDS Education and Training Center. Partially funded by the National Library of Medicine
Fact Sheets can be downloaded from the Internet at http://www.aidsinfonet.org

பல்வேறு வியடிகல் நிறுவனங்கள் பற்றிய தகவலை அறியலாம்.

வியடிகல் செட்டில்மெண்ட் தகவல்கள் அறிய 2 இணயதள முகவரி

- http://www.viatical-expert.net/
- , http://www.viatical-web.org/

**சுருக்கமாக கூறினால்**

உங்களிடம் ஆயுள் காப்பீட்டு பாலிசிகள் இருந்தல், நீங்கள் அதனை விற்று அந்த பணத்தை உங்கள் விருப்பப்படி உபயோகிக்கலாம். ஆயுள் காப்பீட்டு பாலிசி பத்திரங்களை வாங்க பல நிறுவனங்கள் உள்ளன. ஒவ்வொரு நிறுவனமும் ஆயுள் காப்பீட்டு பாலிசிகளுக்கு தங்களின் ஆப்பரை நிபந்தனைகளுடன் தருகின்றன. நாம்தான் சிறந்த ஆப்பரை தேர்வு செய்ய வேண்டும்.

ஆயுள் காப்பீட்டை விற்பதால், வருமான வரி அல்லது நாம் பெற்று வரும் வருமான சலுகைகள் பலவற்றை இழக்க நேரிடலாம். காப்பீட்டை விற்பதற்கு முன் நன்றாக ஆலோசனை பெறவும்.